## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 5-7 - நோற்ற நோன்பு[1]
### (ப்ராபக நிஷ்கர்ஷம் செய்யும் திருவாய்மொழிகளில் முதலாவது; ஆழ்வார் தமது ஆகிஞ்சன்யத்தை [கைம்முதலில்லாமையை] எடுத்துக் கூறி வானமாமலைப் பெருமானிடத்தில் ப்ரபத்தி பண்ணுதல்)

3183 * நோற்ற நோன்பிலேன் * நுண்ணறிவிலேன் * ஆகிலும் இனி உன்னை விட்டொன்றும்
ஆற்றகிற்கின்றிலேன் * அரவினணை அம்மானே! **
சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் * சிரீவர மங்கல நகர் *
வீற்றிருந்த எந்தாய்! * உனக்கு மிகை அல்லேன் அங்கே 1

3184 அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன் * உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து * நான்
எங்குற்றேனும் அல்லேன் * இலங்கை செற்ற அம்மானே! **
திங்கள் சேர் மணி மாட நீடு * சிரீவர மங்கல நகர் உறை *
சங்கு சக்கரத்தாய்! * தமியேனுக்கு அருளாயே 2

3185 கருளப் புட்கொடி சக்கரப் படை * வான நாட! என் கார்முகில் வண்ணா *
பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி * அடிமை கொண்டாய் **
தெருள் கொள் நான்மறை வல்லவர் பலர் வாழ் * சிரீவர மங்கல நகர்க்கு *
அருள் செய்து அங்கிருந்தாய்! * அறியேன் ஒரு கைம்மாறே 3

3186 மாறுசேர் படை நூற்றுவர் மங்க * ஓர் ஐவர்க்காய் அன்று மாயப் போர் பண்ணி *
நீறு செய்த எந்தாய்! * நிலங் கீண்ட அம்மானே! **
தேறு ஞானத்தர் வேத வேள்வியறாச் * சிரீவர மங்கல நகர் *
ஏறி வீற்றிருந்தாய்! * உன்னை எங்கெய்தக் கூவுவனே? 4

3187 எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு? * எவ்வதெவ்வத்துளாயுமாய் நின்று *
கைதவங்கள் செய்யும் * கருமேனி அம்மானே! **
செய்த வேள்வியர் வையத் தேவரறாச் * சிரீவர மங்கல நகர் *
கை தொழ இருந்தாய் * அது நானும் கண்டேனே 5

3188 * ஏனமாய் நிலங் கீண்ட என் அப்பனே! கண்ணா! * என்றும் என்னை ஆளுடை *
வான நாயகனே! * மணி மாணிக்கச் சுடரே **
தேனமாம் பொழில் தண் சிரீவர மங்கலத்தவர் * கை தொழ உறை *
வானமாமலையே! * அடியேன் தொழ வந்தருளே 6

---
[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி

3189 வந்தருளி என் நெஞ்சிடங் கொண்ட * வானவர் கொழுந்தே * உலகுக்கோர்
முந்தைத் தாய் தந்தையே! * முழு ஏழ் உலகும் உண்டாய் **
செந்தொழிலவர் வேத வேள்வியறாச் * சிரீவர மங்கல நகர் *
அந்தமில் புகழாய்! * அடியேனை அகற்றேலே 7

3190 அகற்ற நீ வைத்த மாய வல் ஐம்புலன்கள் * ஆமவை நன்கறிந்தனன் *
அகற்றி என்னையும் நீ * அருஞ்சேற்றில் வீழ்த்தி கண்டாய் **
பகற் கதிர் மணி மாட நீடு * சிரீவர மங்கை வாணனே! * என்றும்
புகற்கரிய எந்தாய்! * புள்ளின் வாய் பிளந்தானே! 8

3191 புள்ளின் வாய் பிளந்தாய்! மருதிடை போயினாய்! * எருதேழ் அடர்த்த * என்
கள்ள மாயவனே! * கருமாணிக்கச் சுடரே **
தெள்ளியார் திருநான் மறைகள் வல்லார் * மலி தண் சிரீவர மங்கை *
உள் இருந்த எந்தாய்! * அருளாய் உய்யுமாறு எனக்கே 9

3192 ஆறெனக்கு நின் பாதமே * சரணாகத்தந்தொழிந்தாய் * உனக்கோர் கைம்
மாறு நான் ஒன்றிலேன் * எனதாவியும் உனதே **
சேறு கொள் கரும்பும் பெருஞ் செந்நெலும் * மலி தண் சிரீவர மங்கை *
நாறு பூந்தண் துழாய் முடியாய்! * தெய்வ நாயகனே! 10

3193 * தெய்வ நாயகன் நாரணன் * திரிவிக்கிரமன் அடியிணை மிசை *
கொய் கொள் பூம்பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் **
செய்த ஆயிரத்துள் இவை * தண் சிரீவர மங்கை மேய பத்துடன் *
வைகல் பாட வல்லார் * வானோர்க்கு ஆராவமுதே 11

**அடிவரவு:** நோற்ற அங்கு கருள மாறு எய்த ஏனம் வந்து அகற்ற புள்ளின்
ஆறு தெய்வ ஆரா